டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.10.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 107 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் செம்மரங்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு தேசிய பல்லுயிர் ஆணையம் ரூ.55 லட்சம் விடுவித்தது

புது தில்லி, அக்.29

இந்தியாவின் உயிரி வளங்களின் நீடித்த பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக அணுகல் மற்றும் பயன் பகிர்வு கட்டமைப்பின் கீழ், சிறப்புமிக்க முன்முயற்சியாக மாநில பல்லுயிர் வாரியம் மூலம் தமிழ்நாட்டில் செம்மரங்கள் வளர்ப்பு விவசாயிகள் 18 பேருக்கு தேசிய பல்லுயிர் ஆணையம் ரூ.55 லட்சம் விடுவித்துள்ளது. இந்த விவசாயிகள் திருவள்ளூர் மாவட்டத்தின் கண்ணபிரான் நகர், கோத்தூர், வேம்பேடு, சிறுணியம், கூனிப்பாளையம், அம்மாம் பாக்கம், அல்லிக்குழி, திம்மபூபாலாபுரம் ஆகிய 8 கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர்.

விவசாயிகளுக்கு முதல் முறையாக வழங்கப்படும் பயன் பங்களிப்பு முன்முயற்சி, உள்ளடக்கிய பல்லுயிர் பாதுகாப்பை நோக்கிய வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கையைக் குறிக்கிறது. முன்னதாக, தேசிய பல்லுயிர் ஆணையம் அணுகல் மற்றும் பயன் பங்களிப்பாக, ஆந்திரப்பிரதேச வனத்துறை, கர்நாடகா வனத்துறை, ஆந்திரப்பிரதேச மாநில உயிரிப் பாதுகாப்பு வாரியம் ஆகியவற்றுக்கு செம்மரங்கள் பாதுகாப்பிற்காக ரூ.48 கோடியை விடுவித்தது.

இந்த முன்முயற்சி, 2015-ம் ஆண்டு தேசிய பல்லுயிர் ஆணையம் அமைத்த செம்மரங்கள் தொடர்பான நிபுணர் குழுவின் பரிந்துரையாகும். இக்குழு, பாதுகாப்பு, நீடித்த பயன்பாட்டிற்கான கொள்கை மற்றும் செம்மரங்களை பயன்படுத்துவதிலிருந்து நியாயமான, சமமான பயன் பங்களிப்பு என்ற தலைப்பில், விரிவான அறிக்கையைத் தாக்கல் செய்தது.

இக்குழுவின் முக்கியப் பரிந்துரைப்படி, வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம், 2019 கொள்கை தளர்வு மூலம், செம்மரங்கள் விளைவிக்கும் பகுதியிலிருந்து அதை ஏற்றுமதிக்கு அனுமதித்தது. இது செம்மரங்களின் பாதுகாப்பு மற்றும் வர்த்தகத்திற்கு பெரும் ஊக்கம் அளித்தது.

# இன்று மூலிகை பயிர் சாகுபடி குறித்த ஒரு நாள் கருத்தரங்கு



திருச்சி, அக்.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற இன்று (30.10.25) வியாழக்கிழமை காலை 9.30 மணி அளவில் தேசிய மருத்துவ தாவர வாரியத்துடன் இணைந்து மூலிகை பயிர் சாகுபடி குறித்த கருத்தரங்கு மற்றும் நிலைய பயிற்சி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது. இந்த கருத்தரங்கில் துளசி, தூதுவளை, வல்லாரை, கரிசலாங்கண்ணி, பொன்னாங் கண்ணி, அருகம்புல், கற்பூரவள்ளி, வெற்றிலை, நொச்சி, ஆடா தொடை, நிலவேம்பு, சோற்றுக்கற்றாழை, மஞ்சள் மற்றும் இஞ்சி போன்ற பல்வேறு வகையான மூலிகை பயிர் சாகுபடி, தரப் படுத்துதல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி, மதிப்புக் கூட்டுதல், அழிந்து வரும் மூலிகை தாவரங்கள் பாதுகாப்பு, மூலிகை தாவரங்கள் குறித்த விழிப்புணர்வு, வீட்டு மூலிகை தோட்டம் அமைத்தல் போன்றவைகள் பற்றி எடுத்துரைக்கப்பட உள்ளது. எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு குறிப்பேடு மற்றும் மதிய உணவு வழங்கப்படும். விரும்பமுடைய விவசாயிகள் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832, 98655 42358, 88381 26730 என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விவசாயிகளுக்கான உயிர்ம சான்று நடைமுறைகள் பயிற்சி



ஈரோடு, அக்.29

வேளாண்மை உழவர் நலத்துறையின், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கூடக்கரை கிராமத்தில் விவசாயிகளுக்கான உயிர்ம சான்று நடைமுறைகள் விவசாயிகள் பயிற்சி (Organic Certification Produce for Farmers) 28.10.25 அன்று ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நெல், நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பேராசிரியர் முனைவர் சத்தியசீலன், மண் மாதிரி சேகரித்தல் நல்ல தரமான விதைகள் தேர்வு, இயற்கை உரம் தயாரித்தல், பூச்சி நோய் கட்டுப்பாடு பற்றி விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். மைராடா வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ஜான் பிரபாகரன், அறுவடைக்கு பின் சார் தொழில்நுட்பம் முறைகள் மற்றும் இயந்திர பயன்பாடுகள் பற்றி விளக்கினார்.

விதைச்சான்று அலவலர் ஹரிபிரசாத், விதைச்சான்று துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் வெங்கிடுசாமி, வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் திட்டங்கள் மானிய விபரங்கள் உழவன் செயலி பயன்பாடுகள் பற்றி விளக்கினார். இந்த விவசாயிகள் பயிற்சியில் வேளாண்மை துறை சார்பாக 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மெய்யரசு மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் தங்கராசன், பரமானந்தன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி. விதைநேர்த்தி விழிப்புணர்வு முகாம்



திண்டுக்கல், அக்.29

திண்டுக்கல் மாவட்டம், கோனூர் கிராமத்தில் இப்கோ நிறுவனத்தின் சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி. விதை நேர்த்தி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி கார்த்திகேயன், கலந்து கொண்டு, நானோ டி.ஏ.பி. விதைநேர்த்தியின் முக்கியத்துவம், பயன்படுத்தும் சரியான முறை, நானோ தொழில்நுட்பத்தின் நன்மைகள் மற்றும் அவை குருணை உரங்களைவிட அதிக வளர்ச்சி மற்றும் மகசூலை தரக்கூடியது என்றும் விவசாயி களுக்கு விரிவாக விளக்கினார். அவர் மேலும் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி. அளவில் விதைே நர்த்தி செய்யலாம். அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி. கலந்து நாற்று, கரணை, கிழங்கு போன்ற வற்றில் நேர்த்தி செய்யலாம். நேர்த்தி செய்த விதைகளை நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் நானோ டி.ஏ.பி. பயன்பாட்டினால் விதை முளைச்சல் விகிதம் அதிகரிக்கும், வேர் வளர்ச்சி சிறப்பாகும், இலைகளில் குளோரோபில் உற்பத்தி மேம்படும், தாவர நோய் எதிர்ப்பு சக்தி உயரும், விளைச்சல் மற்றும் வருமானம் அதிகரிக்கும்.

இக்கருத்தரங்கம் விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. விவசாயிகள் நானோ உரங்களின் பயன்களை அறிந்து மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் எதிர்கால பாசன காலங்களிலும் இதனைப் பயன்படுத்துவோம் என உறுதியுடன் தெரிவித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்து அதிக லாபம் பெறுவீர்!

இறவையில் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம். உலக அளவில் நிலக்கடலை உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்திலும் மற்றும் தமிழ்நாடு மூன்றாம் இடத்திலும் உள்ளது. நிலக்கடலை நம் நாட்டில் முக்கிய எண்ணெய் வித்து பயிர். பெரும்பாலான மாவட்டங்களில் நிலக்கடலை கார்த்திகை பட்டத்தில் விதைக்கப்படுகிறது. இறவையில் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம்.



வேலூர் மாவட்டத்தில் தற்போது பரவலாக நல்ல மழை பெய்து வருவதால் நிலக்கடலை சாகுபடி செய்வது நல்ல வருவாய் அளிக்கும். ஏனெனில் இப்பயிருக்கு குறைந்த நீர், உரம், பயிர் பாதுகாப்பு மருந்து பயன்படுத்தி நல்ல மகசூல் எடுக்கலாம். அது மட்டுமல்லாமல் இது ஒரு நடுத்தர கால பயிர் ஆகும். பயிரிட ஏற்ற இரகங்கள் TMV-14, VRI-10, K1812, Dharani ஆகும். இவற்றில் ஏதாவது ஒரு இரகத்தினை தேர்வு செய்து நல்ல தரமான விதையினை ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ என்ற அளவில் 30 செ.மீ வீதம் வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியில் விதைகளை விதைப்பு செய்ய வேண்டும்.

நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 7:14:21 என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். இத்துடன் 80 கிலோ ஜிப்சத்தினை அடியுரமாகவும், மேலும் 80 கிலோ ஜிப்சத்தினை இரண்டாம் களையெடுப்பின் போதும் இட்டு நன்கு மண் அணைக்க வேண்டும்.

ஜிப்சம் இடுவதால் நிலக்கடலையில் அம்பு உற்பத்தி எண்ணிக் கையை அதிகரிக்கச் செய்து காய்களை திரட்சியாக்குகிறது. இது மட;டுமல்லாமல் மகசூலை அதிகப்படுத்துவதற்கு மிக மிக முக்கிய காரணியாக விளங்குவது விதையின் தரமாகும். தரமான விதைகளே உயர் விளைச்சலுக்கு வழிவகுக்கும்.

விதை உற்பத்திக்கு தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும். விதையின் தரத்தை அறியாமல் விதைப்பு செய்தால் விதைப்பு செய்த பிறகு பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனெனில் நிலக்கடலையில் எண்ணெய் சத்து 45 சதம் முதல் 56 சதம் வரை இரகத்திற்கு ஏற்றவாறு இருக்கும். இதனால் நாளாக நாளாக முளைப்புத் திறன் குறையும். இதனால் மகசூல் குறைந்து வருவாய் குறைவு ஏற்படும். இந்த பாதிப்பில் இருந்து விவசாயிகள் தங்களை தற்காத்து கொள்ள தங்கள் கைவசம் வைத்திருக்கும் விதைகளை விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன் 1 கிலோ அளவுள்ள நிலக்கடலையை எண். நெ.96/3, ஒழுங்குமுறை விற்பனை குழு கட்டிட வளாகம், 2ஆம் தளம், அண்ணாசாலை, டோல்கேட், வேலூர் – 632 001 என்ற முகவரியில் அமைந்துள்ள வேலூர் விதைபரிசோதனை நிலையத் திற்கு நேரடியாகவோ அல்லது கூரியர் மூலமாகவோ அனுப்பி ரூ.80/– பரிசோதனை கட்டணமாக செலுத்தி விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு நல்ல தரமான விதைகளை மட்டும் விதைப்பு செய்வதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என வேலூர் விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.லதா தெரிவித்துள்ளார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# வெள்ள பாதிப்பின் போது நெல் பயிரை பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்

இராணிப்பேட்டை, அக்.29

கடந்த சில நாட்களாக ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வடகிழக்கு பருவமழை தீவிர மடைந்துள்ளது. அதனால் பல்வேறு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் நீரில் முழ்கி சேதமடையக்கூடும். சம்பா பயிர்கள் நீரில் முழ்கி சேதமடைந்துள்ள பயிர்களை நிவர்த்தி செய்வதற்கு கீழ்கண்ட பயிர் மேலாண்மை முறைகளை கையாளுமாறு விவசாயிகளை வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி.திலகவதி கேட்டுக் கொண்டார்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கான உழவியல் பரிந்துரைகள்**



தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப் படுத்தி பயிர் முழ்காத வாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும். தற்போது முழ்கியிருக்கும் பகுதிகளில் இளம் பயிரில் நட்ட குத்துகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் அதே இரக நாற்றுக்கள் கிடைத்தால் பயிர் இல்லாத இடத்தில் நடவு செய்ய வேண்டும். பயிரின் நிலைக்கேற்ப ஊட்டச் சத்து நிர்வாகமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேங்கி உள்ள நீரை வடித்த உடன் வரிசை நடவு மேற்கொண்ட வயல்களில் கோனோ வீடர் அல்லது ரோட்டரி வீடர் கருவி மூலம் மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்தி வேர்கள் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்துக் கொள்ள வழி வகை செய்ய வேண்டும்.

நீர் வடிந்த பிறகு பயிரின் வளர்ச்சி சரியாக இல்லாத இடங் களில் வளர்ச்சியை மேம்படுத்த ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா உடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம்

புண்ணாக்கு கலந்து 1 நாள் இரவு வைத்திருந்து இத்துடன் 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் சீராகத் தூவ வேண்டும். இந்த உரங்களை இடும்பொழுது வயலில் சீராக தண்ணீர் வைத்துக் கொள்வதுடன் நீர் வெளியேறிவிடாதவாறு பராமரிப்பும் செய்ய வேண்டும்.

பயிரின் வளர்ச்சி மிகவும் குன்றி துத்தநாக சத்து பற்றாக்குறை தென்பட்டால் உடனடியாக ஏக்கருக்கு 200 லி. தண்ணீரில் 2 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ ஜிங்சல்பேட்டைக் கரைத்து கைத் தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும். நானோ யூரியாவை ஏக்கருக்கு 500 மி.லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாவினால் நெற்பயிரில் அழுகல் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஏக்கருக்கு 400 கிராம் கார்பன்டசிம் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு உடனடியாக தெளிக்கவும்.

இந்த பருவத்தில் இலை சுருட்டுப்புழு மற்றும் குருத்துப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளதால் இதனை கட்டுப் படுத்த க்ளோரன்ட்ரனில்லி புரோல் 0.4% G ஏக்கருக்கு 4 கி. அல்லது கார்டாப் ஹைட்ரோ க்ளோரைட் 4% GR 6 கிலோ இடவும்.

இந்த பருவத்தில் போதிய சூரிய வெளிச்சம் இல்லாததாலும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையாலும் மண்ணின் வெப்ப நிலை குறைவாக காணப்படுவதாலும் நெற்பயிரினால் போதிய சத்துக் களை எடுத்துக் கொள்ள முடியாது. இத்தருணத்தில் ஏக்கருக்கு 2 கிலோ யூரியா, 2 கிலோ டி.ஏ.பி. உடன் 2 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்சை 200 லிட்டர் நீரில் கரைத்து காலை அல்லது மாலை வேலையில் கைத்தெளிப்பான் கொண்டும் தெளிக்கலாம்.

மேலும் மழையால் பாதிப்பான பயிர்களை அறிக்கையாக அரசுக்கு சமர்பித்திட உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களது உழவர் அலுவலர் தொடர்பு திட்டதின் செயலியில் பதிவேற்றம் செய்ய கட்டாயம் என்பதால் பயிர் பாதிப்பு அடைந்த விவசாயிகள் தங்களது கிராமதிற்கான உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு, பாதிப்பு குறித்த தகவலை தெரிவித்திட கேட்டு கொள்ளபடுகிறார்கள் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

வாலாஜா வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் மேகலா மற்றும் ஞானசௌந்தரி, தகரகுப்பம் கிராமத்தில், விவசாயி பிச்சு மணியின் மழையால் பாதிப்பான நெற்பயிரினை பார்வையிட்டு பாதிப்பினை உழவர் அலுவலர் தொடர்பு திட்டத்தின் செயலியில் பதிவேற்றம் செய்தனர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.29

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி விரைவில் நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் பசுமைக்குடில் அமைப்பு, கட்டுமானப் பொருட்களின் தேர்வு, பாசன முறை, தாவர மேலாண்மை, நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, சந்தைப்படுத்தல் ஆகிய தலைப்புகள் குறித்து நிபுணர்கள் வழிகாட்டுவர். பயிற்சி அக்டோபர் 30 முதல் நவம்பர் 28 வரை நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்புவோர், தங்களின் பெயர், முகவரி, தொடர்பு எண் ஆகிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க குறைந்தது 12ஆம் வகுப்பு கல்வி தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். வேளாண், தோட்டக்கலை, பாலிடெக்னிக் அல்லது பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் தொழில் முனைவு மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த வழிகாட்டலும் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3, மின்னஞ்சல் : swc@tnau.ac.in, தொலைபேசி எண் : 97899 82772 தொடர்பு கொள்ளலாம்.





Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள் எவை?

**பயிர்களுக்கு நுண்ணூட்ட சத்துகளை அளிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்?**

பயிர்களுக்கு பேரூட்ட சத்துகளை (N.P.K) போன்றே நுண்ணூட்ட சத்துகளும் முக்கியமானதாகும். இவை பயிரின் வளர்ச்சிக்கும் அதிகமான மகசூலுக்கும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.

**நுண்ணூட்ட சத்துகள் (MICRO NUTRIENTS) எவை தெரியுமா?**

துத்தநாகம், போரான் இரும்பு, மாங்கனீஸ், மாலிப்டினம், தாமிரம் ஆகியவையாகும். இவை பயிர்களில் ஏற்படும் வளர்சிதை மாற்றங்களில், ஈடுபடும் பல்வேறு என்ஸைம்கள் எனப்படும் நொதிப்பான்களை உருவாக்குவதிலும் அதனை இயக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. பயிர்களின் வளமான இலை வளர்ச்சிக்கும் திரட்சியான காய்கள் உருவாவதற்கும் கூடுதலான மகசூல் கிடைப்பதற்கும் அவசியமாக மண்ணின் தன்மைகேற்ப சிறிய சிறிய அளவிலேயே தேவைப்படுகிறது.

இந்த நுண்ணூட்ட சத்துகள் அனைத்தும் ஒன்றாக கிடைக்கக் கூடிய உரமில்லை. எனவே மண்ணின் தன்மைகேற்ப இந்த தனிமங்கள் அடங்கிய உரங்களைத் தனித்தனியாகவோ அல்லது கலவையாகவோ பயன்படுத்துவது அவசியம்.

**நுண்ணூட்ட கலவை (M.N.MIXTURE)**

அனைத்து பயிர்களுக்கு தயாரிக்கப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானியமாக வழங்கப்படுகிறது. இவை 5 கிலோ பை, 2 கிலோ பையாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

**எந்தெந்த பயிருக்கு எந்த நுண்ணூட்ட உரம் அவசியமாகிறது?**

நெல் – துத்தநாகம்

பருத்தி – மெக்னிசியம்

தென்னை – போரான்

எள் – மாங்கனீஸ்

காய்கறி பயிர்கள் – மாலிப்டினம்

தானிய பயிர்கள் – இரும்பு

**நுண்ணூட்ட சத்துகளை அளிக்கும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்?**

1) கடைசி உழவில் நாற்று நடுவதற்கு முன்னதாக மேலேட்டமாக இட வேண்டும்.

2) ஈரப்பதம் இருக்கும் போது தான் இவற்றை இடவேண்டும்.

3) நுண்ணூட்ட சத்துகளை இதர உரங்கள் பூச்சிக் கொல்லி மற்றும் பூஞ்சான கொல்லி ஆகியவற்றுடன் கலந்து அளிக்கக் கூடாது.

4) நுண்ணூட்ட சத்துகள் சிறிய அளவாக இருப்பதால் அவற்றை எளிதாக எல்லா இடங்களில் தூவி விட மணல் கலந்து தூவி விட வேண்டும்.

5) பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக நுண்ணூட்ட சத்துகளை இடக்கூடாது.




6) நுண்ணூட்ட கலவையை இலை வழியாக தெளிப்பாக (FOLIAR SPRAY) செய்யும் போது 1% கரைசலுக்கு மேற்படக்கூடாது. 100 கிராம் நுண்ணூட்ட கலவையை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து பின் நுண்ணிய தெளிப்பை தெளிக்கலாம்.

7) இலைவழியாக தெளிப்பினை வெயில் நேரங்களில் தெளிக்கக்கூடாது. காலை/மாலை நேரத்தில் தெளிக்கலாம்.

8) நுண்ணூட்ட உரங்களை மற்ற உரங்களுடன் கலந்து போடக்கூடாது. நிலத்தின் மேற்பரப்பில் தான் இடவேண்டும். ஆழமாக இடக்கூடாது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மருத்துவக்குணம் நிறைந்த தட்டைப்பயறு குறித்த தொழில்நுட்பச் செய்தி

சேலம், அக்.29

தட்டைப்பயறு உணவு தானிய உற்பத்தியிலும், மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்பயிர் மனிதனுக்கு மட்டுமல்லாது. விலங்குகளுக்கும் குறைந்த செலவில் அதிக புரதம் மற்றும் நார்ச்சத்து அளிக்கும் வல்லமை கொண்ட பயிராகும். இப்பயிர் குறைந்த வயதில் (65-70 நாட்கள்) வளர்ச்சி அடைந்து விளைச்சலைக் கொடுப்பதால் வளரும் நாடுகளில் தானியங்கள் பயறுவகைப் பயிர்களின் பயிர்ச் சுழற்சி முறையில் தானிய பயிர்களின் அறுவடைக்கு முன்னரே அறுவடை செய்வதால் அப்பருவத்தில் மக்களுக்கு ஏற்படும் பசியைத் தீர்க்கும் பயிராக இருப்பதால் இப்பயிர் பசியைத் தீர்க்கும் பருவத்தைய பயிர் அழைக்கப்படுகிறது.

## தட்டைபயறின் மருத்துவக் குணங்கள்

● இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவைக் கட்டுப் படுத்துவதில் தட்டைப்பயறின் கரையும் நார்ச்சத்து மற்றும் புரதச்சத்து முக்கியப்பங்கு வகிக்கிறது.

● புற்றுநோய் (கேன்சர்) செல்களின் வளர்ச்சியைத் தடை செய்வதில் தட்டைப்பயறின் ஆண்டி ஆக்ஸிடண்டு காரணிகள் முக்கியப் பங்கு வகிக்கிறது.

● இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பராமரிப்பதில் முக்கியப் பங்காகச் செயல்படுகிறது.

● இதய நோய் வராமல் தடுப்பதில் தட்டைப் பயறில் உள்ள பிளவனாய்டு முக்கியக் காரணியாகச் செயல்படுகிறது.

● தலைமுடிகளின் உதிர்வைக் குறைத்து முடிகளின் வளர்ச்சிக்கும், மிருது தன்மைக்கும், பளபளப்பிற்கும் முக்கியப் பங்கு வைக்கிறது.

● சிறுநீரகக் கல்லைக் கரைப்பதில் தட்டைப்பயறு மற்றும் இலையின் சாறு முக்கியப்பங்கு வகிக்கிறது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.

# முருங்கை உலர்ந்த இலைகளின் ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் ஆரோக்கிய நன்மைகள்

முருங்கை (Moringa oleifera) ஒரு மகத்தான மூலிகை செடி. இது 'மிராக்கிள் ட்ரீ' என உலகளவில் புகழ்பெற்றது. தமிழ்நாட்டின் காற்றோட்டமான பகுதிகளில் பரவலாக வளர்க்கப்படும் முருங்கை, இப்போது உலகளவில் ஒரு முக்கியமான ஏற்றுமதி பொருளாக மாறியுள்ளது, குறிப்பாக அதன் உலர்ந்த இலைகள் மிகுந்த தேவைகளை கொண்டிருக்கின்றன.



## முருங்கை உலர்ந்த இலைகளின் ஏற்றுமதி வாய்ப்புகள்

### 1. உலகளாவிய சந்தை வளர்ச்சி



அமெரிக்கா, கனடா, ஐரோப்பியா மற்றும் ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகளில் முருங்கை உலர்ந்த இலைகளுக்கான தேவைகள் அதிகரித்து வருகின்றன. இயற்கை உணவுகள் மற்றும் சுபீட்சமான வாழ்க்கை முறையை விரும்பும் மக்கள் இந்த தயாரிப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர்.

### 2. விலை நிலைத்தன்மை மற்றும் லாபகரமான வியாபாரம்

குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறக்கூடிய பயிராக முருங்கை திகழ்கிறது. உலர்த்தப்பட்ட முருங்கை இலைகள் தூள், காப்சூல், தேயிலைத் தூள் மற்றும் சப்ளிமெண்ட் வடிவ மாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### 3. சர்வதேச சான்றிதழ்கள் (Certifications)

Organic, GMP, HACCP போன்ற சான்றிதழ்களை பெறுவதன் மூலம், முன்னேறிய சந்தைகளில் நுழைய எளிதாகும். அரசு ஊக்கத்தொகைகள் மற்றும் இயற்கை வேளாண்மைக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் இந்த வியாபாரத்தை மேலும் ஊக்குவிக்கின்றன.

### 4. இணையவழி சந்தை (E-commerce)

Amazon, Etsy, Alibaba போன்ற ஆன்லைன் தளங்கள் முருங்கை உலர்ந்த இலைகளுக்கான புதிய சந்தைகளாக மாறுகின்றன.

## ஆரோக்கிய நன்மைகள்

### 1. ஊட்டச்சத்து மிகுந்தது



முருங்கை இலைகளில் புரதம், வைட்டமின்கள் A, C, E, கால்சியம் மற்றும் இரும்புச்சத்து ஆகியவை மிகுந்தளவில் உள்ளன. இது ஒரு இயற்கை மல்டி-விடமின் போல கருதப்படுகிறது.

### 2. நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் கட்டுப்பாடு

முருங்கை இலைகள் இன்சுலின் செயல்பாட்டை மேம்படுத்தி, ரத்தத்தின் சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகிறது. அதே போல, இரத்த அழுத்தத்தையும் சமநிலையில் வைக்க உதவு கிறது.

### 3. மாற்றுத் தீமைகளுக்கு எதிராக பாதுகாப்பு

வைட்டமின் C மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் நிறைந்த முருங்கை இலைகள் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்து கின்றன. இதனால் காய்ச்சல், தொற்று நோய்கள் போன்ற வற்றை தடுக்க உதவுகிறது.

### 4. சோர்வும் மன அழுத்தமும் குறைப்பு



எந்நாளும் எளிதில் உணவில் சேர்க்கக் கூடிய முருங்கை இலைகள், ஆரோக்கியமான ஆற்றலை தருகின்றன. மன அழுத்தம், தூக்கமின்மை போன்ற பிரச்சனைகளுக்கு ஒரு இயற்கை தீர்வாக விளங்குகின்றது.

முடிவு : முருங்கை உலர்ந்த இலைகள் உலகளவில் அதிகப்படியான ஆரோக்கிய நன்மைகள் கொண்ட இயற்கை உணவாகக் கருதப்படுவதால், இது ஒரு சிறந்த ஏற்றுமதி வாய்ப்பாகவும் விளங்குகிறது. தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகள் கூட இந்த வாய்ப்பை பயன்படுத்தி உலக சந்தையில் நுழைய முடியும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த துறையில் வளமான வளர்ச்சியைப் பெறுவதே நோக்கமாகும்.

முருங்கை வளர்த்தால் வாழ்வில் வளம் தரும்!

தகவல் : **M. கோகுல் பிரனேஷ், துணை பேராசிரியர் மற்றும் P. அர்ச்சனா தேவி, மூன்றாம் ஆண்டு இளங்கலை வேளாண்மை, தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி, பெரம்பலூர்.**

# நெற்பயிருக்கு ஜிங்க் சல்பேட் முக்கியத்துவம்

ஈரோடு, அக்.29

ஈரோடு வட்டாரத்தில் தற்போது நெல் சாகுபடியானது துரிதமாக நடைபெற்று வருகிறது. நெல் பயிருக்கு அடிப்படையாக தேவைப்படும் ஊட்டச்சத்துக்கள் தழை, மணி, சாம்பல், இரும்பு, துத்தநாகம், காப்பர், மாங்கனீஸ் ஆகியவை ஆகும்.

மேலும் நடவு செய்த நெல் வயலில் ஜிங்க் சல்பேட் பற்றாக் குறையால் பயிர் வளர்ச்சி குன்றியும், தூர் கட்டுதல் குறைந்தும் காணப்படும். முதலில் இளம் தளிர்கள் மஞ்சளாகவும், பின் இலைகளும் மஞ்சள் நிறமாக காணப்படும். இலையின் அடிபாகத்தில் நடு நரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிறமாக காணப்படும். இலையின் அடிபாகத்தில் நடு நரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிறக்கோடுகள் தோன்றும். இதனால், மகசூல் பெரிதும் பாதிக்கும் நிலை ஏற்படுகின்றது. எனவே விவசாயிகள் துத்தநாக சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நெற்பயிர் நடவுக்கு முன்பு ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட்டினை 20 கிலோ மணலுடன் கலந்து நடுவதற்கு முன் சீராக இட வேண்டும். களர் நிலமாக இருந்தால் ஏக்கருக்கு 16 கிலோ ஜிங்க் சல்பேட்டினை 20 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும்.

நட்ட பின்பு 30 முதல் 40 நாட்களுக்குள் ஒருமுறையும் இட்டு, அதிக மகசூல் பெறலாம். மேலும் நெற்பயிர் மண்ணில் உள்ள தழைச்சத்தினை சரியாக உறிஞ்சி எடுக்கவும், அதன் பயன் பாட்டுத்திறன் அதிகரிக்கவும் ஜிங் சல்பேட் துணை புரிகிறது. தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளை பயிர் எடுத்துக்கொள்ள கிரியா ஊக்கியாக ஜிங்க் சல்பேட் செயல்படுகிறது மற்றும் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தியையும் கொடுக்கிறது என்று சென்னிமலை வேளாண் உதவி இயக்குநா (பொ) சி.சசிகலா தெரிவித்துள்ளார்.



# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# இயற்கை வழியில் கொசுக்களை விரட்டுவோம் : ஆரோக்கியமான வீட்டிற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஒரு வழிகாட்டி

**கொசுக்கள் – ஒரு சிறிய பூச்சி, ஒரு பெரிய அச்சுறுத்தல்**



சாதாரண தொந்தரவாகக் கருதப்பட்ட கொசுக்கள், இன்று சாதாரணக் காய்ச்சல் தொடங்கி டெங்கு, ஜிகா வரை பரப்பும் ஒரு பெரிய பொது சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளன. பெரும்பாலான மாதங்களில் நம்மைச் சுற்றி வலம் வரும் இந்த சிறிய பூச்சிகள், நமது ஆரோக்கியத்திற்குப் பெரும் சவாலாக உள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த நாம் பயன்படுத்தும் கொசு வர்த்திச் சுருள் மற்றும் லிக்விடேட்டர் போன்ற இரசாயன விரட்டிகள், தலைவலி மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை உருவாக்கும் அபாயம் கொண்டவை. இன்னும் சில வீடுகளில் எலி, கரப்பான் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுத்தும் தெளிப்பான்களை, கொசுக்களை அழிக்க வீடு முழுவதும் தெளிக்கும் ‘புத்திசாலித்தனம்’ உயிரைப் பறிக்கும் அளவுக்கும் கொண்டு செல்லலாம். இந்த இரட்டை அபாயங்களிலிருந்து நம்மையும் நம் குடும்பத்தையும் பாதுகாக்க, இயற்கையான மற்றும் பாதுகாப்பான வழிமுறைகளுக்கு மாறுவது அவசியமாகிறது. இந்த வழிகாட்டி, நம் முன்னோர்கள் பின்பற்றிய எளிய, ஆனால் சக்திவாய்ந்த இயற்கை முறைகளைக் கொண்டு கொசுக்களை திறம்பட கட்டுப்படுத்துவதற்கான அறிவை உங்களுக்கு வழங்கும்.

**தனிநபர் பாதுகாப்பு : நறுமணக் கவசத்துடன் கொசுக்கடியைத் தடுத்தல்**

கொசுக்களுக்கு எதிரான நமது முதல் பாதுகாப்பு அரண், நமது உடல்தான். நம் உடலில் இயற்கையான நறுமணத்தைப் பராமரிப்பதன் மூலம், கொசுக்கள் நம்மை அண்டுவதை இயல்பாகவே குறைக்க முடியும். வேதிப்பொருட்கள் இல்லாத தனிநபர் பராமரிப்பு முறைகள், கொசுக்கடியிலிருந்து பாதுகாக்க ஒரு சிறந்த உத்தியாகும்.

**1. நறுமணக் குளியல் முறைகள் (Aromatic Bathing Techniques)**

இயற்கையான நறுமணப் பொருட்களைக் கொண்டு குளிப்பது கொசுக்களை விரட்ட எளிய மற்றும் சிறந்த வழியாகும். இயற்கையாக உடலில் வாசனை கமழும் போது கொசுக்கள் கடிப்பதற்குத் தயக்கம் காட்டுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

● குளிக்கும் நீரில், வாசனைமிக்க கற்பூரவல்லி, கறிவேப்பிலை, துளசி, செம்பருத்தி இதழ்கள், எலுமிச்சை இலைகள் மற்றும் உலர்ந்த நெல்லி போன்றவற்றைச் சேர்த்துக் குளிக்கலாம்.

● குளிப்பதற்கு முன், புதினா அல்லது திருநீற்றுப் பச்சிலை இலைகளைக் கசக்கி உடலில் தேய்ப்பது நல்ல பலனைத் தரும்.

● 'நலங்கு மாவு' போன்ற பாரம்பரிய நறுமணக் குளியல் பொடிகளைப் பயன்படுத்துவது, உடலில் இயற்கையான நறுமணத்தை நாள் முழுவதும் தக்கவைக்க உதவும்.

● காலை மற்றும் மாலை என இருவேளை குளித்து, உடலைச் சுத்தமாக வைத்திருப்பது கொசுக்களை அண்டவிடாமல் தடுக்கும் ஒரு அடிப்படைப் பழக்கமாகும்.

**2. உடலில் தடவும் இயற்கை விரட்டிகள் (Natural Topical Repellents)**

தீங்கு விளைவிக்கும் இரசாயன வாசனைத் திரவியங்களுக்குப் பதிலாக, இயற்கையான விரட்டிகளைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது மற்றும் பயனுள்ளது.

**● சந்தனக் கலவை (Sandalwood Paste)**

வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்த இரசாயன வாசனை திரவியங்களுக்குப் பதிலாக சந்தனக் கலவையைப் பூசுவது, கொசுக்களை அண்டவிடாமல் தடுக்கும்.

**● கற்பூராதி எண்ணெய் (Karpuradhi Thailam)**

இந்த சித்த மருந்து எண்ணெயை உடலில் லேசாகத் தடவிக் கொள்வது, கொசுக்கடியின் தாக்குதலிலிருந்து ஒரு சிறந்த கவசமாகச் செயல்படும்.

**● வேப்பெண்ணெய் (Neem Oil)**



காடுகளில் வசிக்கும் பழங்குடி மக்கள், கொசு மற்றும் பாம்புக் கடியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேப்பெண் ணெயை உடலில் தடவும் பாரம்பரியப் பழக்கத்தைக் கொண்டு உள்ளனர். இது வேம்பின் சக்திவாய்ந்த விரட்டும் தன்மையை நமக்கு உணர்த்துகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**தனிநபர் பாதுகாப்பை உறுதி செய்தபின், நமது இல்லத்தையும் கொசுக்களிடமிருந்து பாதுகாப்பது அடுத்த கட்டமாகும்.**

## உங்கள் இல்லத்தைப் பாதுகாத்தல்

## மூலிகைப் புகை மற்றும் இயற்கை விரட்டிகள்

நமது வீடு என்பது நமது பாதுகாப்பான புகலிடம். அந்தப் புகலிடத்தில் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களைத் தவிர்த்து, இயற்கையான மூலிகைகளைக் கொண்டு காற்றைத் தூய்மைப் படுத்தி, கொசுக்களை விரட்டுவது ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும்.

### 1. வீட்டு வாசலில் புகை போடுதல் (Outdoor Smoke Fumigation)

கிராமப்புறங்களில் இன்றும் பின்பற்றப்படும் ஒரு சிறந்த பாரம் பரிய முறை இது. வீட்டு வாசலில் புகை போடுவதன் மூலம் வீட்டிற்குள் கொசுக்கள் நுழைவதைத் தடுக்கலாம்.

**இதைப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள்**

- வேப்பிலை
- நொச்சி
- மாவிலை
- மா மரத்தின் பூக்கள்

இந்த முறையானது, மனிதர்களை மட்டுமல்லாது, கால்நடை களையும் கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கும் இரட்டைப் பயனைக் கொண்டது.

### 2. வீட்டிற்குள் பயன்படுத்தும் மூலிகைப் புகை (Indoor Herbal Fumigation)

மாலை நேரங்களில், அறைகளில் மென்மையாக மூலிகைப் புகை போடுவது கொசுக்களை விரட்டி, ஒரு இதமான சூழலை உருவாக்கும்.

- சாம்பிராணியுடன் உலர்ந்த வேப்பிலை, நொச்சி இலை மற்றும் குப்பைமேனி இலைகளைச் சேர்த்துப் புகை காட்டலாம்.

- பண்டைய காலத்தில், அரண்மனைகளில் விருந்தினர்களை வரவேற்க அகில்கட்டை புகை பயன்படுத்தப்பட்டது. வாய்ப்பு கிடைத்தால், அகில்கட்டை புகை போட்டு வீட்டைத் தூய்மைப் படுத்துவது மிகச் சிறந்த முறையாகும்.

### 3. ஒருங்கிணைந்த புகைக்கலவை (Combined Smoke Mixture)

ஒரு சக்திவாய்ந்த கொசு விரட்டிப் புகையை உருவாக்க, பின்வரும் பொருட்களை ஒன்றாகக் கலந்து பயன்படுத்தலாம்.

- வசம்பு சுட்ட கரி
- தர்ப்பைப்புல்
- மா இலை / பூ
- நொச்சி
- எலுமிச்சை புல்
- வேப்பிலை
- தேங்காய் சிரட்டை

இந்தப் பொருட்களை நேரடியாகப் புகை போடலாம் அல்லது நீர்விட்டு அரைத்து வில்லைகளாகக் காயவைத்தும் பயன் படுத்தலாம்.

**4. எளிய அறைத் தெளிப்பான் (Simple Room Sprays)**

வீட்டிலேயே உடனடியாகத் தயாரிக்கக்கூடிய ஒரு எளிய மற்றும் வாசனைமிக்க கொசுவிரட்டித் தெளிப்பான் இது. சிறிதளவு கற்பூரத்தை பொடிசெய்து, எலுமிச்சை சாறு மற்றும் தண்ணீருடன் கலந்து, அறைகளில் தெளித்தால் கொசுக்கள் விலகிச் செல்லும்.

இவ்வளவு பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றினாலும், சில சமயங்



களில் கொசுக்கடி ஏற்பட்டுவிடலாம். அவ்வாறு ஏற்பட்டால் என்ன செய்வது?

**கொசு கடித்தபின் செய்ய வேண்டியவை : அரிப்பு மற்றும் புண்களைத் தடுத்தல்**

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி கொசுக்கடி ஏற்பட்டுவிட்டால், அதன் காரணமாக ஏற்படும் அரிப்பைச் சொரிந்து புண்ணாக்காமல் தடுப்பது அவசியம். இதற்காக, சித்த மருத்துவம் பரிந்துரைக்கும் எளிய மற்றும் இதமான தீர்வுகள் உள்ளன.

● கொசுக்கடியால் ஏற்படும் அரிப்பைக் குறைக்க, அருகன் தைலம், குங்கிலிய வெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை அந்த இடத்தில் தடவலாம்.

● இந்த இயற்கை மருந்துகள் அரிப்பைக் கட்டுப்படுத்துவதோடு, சொரிவதால் புண்கள் ஏற்படுவதையும் திறம்படத் தடுக்கும்.

சிகிச்சையை விட, தடுப்பு முறைகளே எப்போதும் சிறந்தவை. எனவே, கொசுக்கள் உருவாகாமல் தடுப்பதே நிரந்தரத் தீர்வாகும்.

**நிரந்தரத் தீர்வு : தடுப்பு முறைகள் மற்றும் சூழலியல் சமநிலை**

கொசுக்களை விரட்டுவது ஒரு தற்காலிகத் தீர்வு மட்டுமே. கொசுக்கள் பெருகும் மூல காரணத்தைக் கண்டறிந்து, அதைச் சரிசெய்வதே நிரந்தரத் தீர்வாகும். இது, சுற்றுப்புறத் தூய்மை மற்றும் இயற்கையான சூழலியல் சமநிலையை மீட்டெடுப்பதில் அடங்கியுள்ளது.

**1. கொசு உற்பத்தித் தடுப்பு (Controlling Mosquito Breeding)**

கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுப்பதே மிக முக்கியமான செயலாகும்.

● **சுத்தம்** : வீட்டைச் சுற்றி ஒரு சுகாதாரமான சூழலை உருவாக்குவது அவசியம். குப்பைகள் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

● **நீர் தேங்குவதைத் தவிர்த்தல்** : கொசுக்கள் தேங்கிய நீரில் முட்டையிட்டுப் பெருகுகின்றன. எனவே, தேவையற்ற இடங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது கொசு உற்பத்தியை வேரோடு தடுக்கும்.

● **கொசு வலை** : உறங்கும் போது கொசு வலையைப் பயன்படுத்துவது, எந்தவித பக்கவிளைவுகளும் இல்லாத மிகவும் பாதுகாப்பான ஒரு உத்தியாகும்.

**2. இயற்கையின் கொசு விரட்டிகள் : தட்டான்கள் (Nature's Mosquito Repellents: Dragonflies)**

இயற்கையிலேயே கொசுக்களைக் கட்டுப்படுத்தும் அற்புதமான உயிரினங்கள் உள்ளன. தட்டான்கள் மற்றும் சில வகை பறவைகளின் முக்கிய உணவே கொசுக்கள் தான். நமது சுற்றுச் சூழல் சீரழிக்கப்பட்டதன் காரணமாக, இந்த நன்மை செய்யும் உயிரினங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இதன் விளை வாக, கொசுக்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் பெருகி விட்டது.

இயற்கை நமக்கு அளித்திருக்கும் இந்த கொசுவிரட்டி மூலிகை களைப் பயன்படுத்துவது என்பது, கொசுக்களின் ஆதிக்கத்தைக் குறைப்பதோடு, இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்க்கை முறைக்குத் திரும்புவதற்கான ஒரு முக்கியமான படியாகும்.

**ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி**

நமது ஆரோக்கியம் நமது கைகளில் தான் உள்ளது. இரசாயனங் களின் ஆபத்திலிருந்து நம்மையும், நமது சுற்றுச்சூழலையும் பாதுகாக்க, இந்த எளிய மற்றும் பாரம்பரிய இயற்கை முறைகளைக் கடைப்பிடிப்பது நமது கடமையாகும். இந்த அறிவை நம் சமூகத்துடன் பகிர்ந்து கொண்டு, கொசுக்களால் பரவும் நோய் களிலிருந்து விடுபட்டு, ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்தை உருவாக்குவோம்.

**தகவல் : சுரேஷ்குமார், மேனாள் வேளாண் ஆசிரியர், நாகலாபுரம், தூத்துக்குடி மாவட்டம்.**

# விதையின் தரம், ஈரப்பதம் அறிந்து பயிர் செய்தால் மகசூல் அதிகரிக்கலாம்

திருப்பூர், அக்.29

பயிர்களின் மகசூல் அதிகரிக்க பரிசோதனை நிலையத்திற்கு ரூ.80 செலுத்தி விதையின் தரம், ஈரப்பதம் அறியலாம் என்று விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் வசந்தி, வேளாண்மை அலுவலர் அறிவுமதி ஆகியோர் விளக்கம் அளித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, தரமான விதையானது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைச்சான்றளிப்புத் தரத்திற்கு ஏற்ப குறைந்தபட்ச

முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் மற்றும் விதை நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும். விதைகள் விற்பனைக்காகவும், அதிகப்படியான விதைகளை தேவையான தருணத்திற்காகவும், ஆதார வித்துக் களாகவும், மரபியல் தொகுப்பு விதைகளாகவும் சேமித்து வைக்கப்படுகின்றன. பொதுவாக உற்பத்தியாகும் விதைகளில் 20-25 சதவீதம் அடுத்த பருவத்திற்காகவே சேமிக்கப்படுகிறது. விதையின் வீரியத்தன்மை நிலைத்து நீடிப்பதில் விதையின் ஈரப்பதம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஈரப்பதமானது விதைகள் வைத்திருக்கும் கழனியில் உள்ள வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்திற்கு ஏற்ப மாறுபடுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

எனவே விதைகளின் தரம் நீடித்திருக்க ஈரப்பத அளவை பராமரித்தல் மிகவும் அவசியமானதாகும். விதைக்காக அறுவடை செய்த விதைக்குவியல்களை காலை 9 மணிமுதல் 11 மணி வரையிலும், மாலை 3 முதல் 5 மணி வரையிலும் மட்டுமே சூரிய ஒளியில் உலர்த்துதல் அவசியம்.

காற்று புகும் கொள்கலன்களில் வைக்கப்படும் விதையின் ஈரப்பதமானது 10-12 சதவீதம் அளவிற்கு பராமரிக்க வேண்டும். காற்று புகாத கொள்கலன்களில் வைக்கும் விதைகளின் ஈரப்பத அளவு 6-8 சதவீதம் அளவில் பராமரித்தல் அவசியமானதாகும்.

விதைக்குவியல்களை விதை இருப்பு கிடங்கில் இருப்பு வைக்கும் பொழுது, சுவற்றினை ஒட்டி அடுக்காமல் குறைந்தது 3 அடி தள்ளி அடுக்கும் பொழுது விதைகள் சுவற்றிலிருந்து ஈரத்தை உறிஞ்சுவது தவிர்க்கப்படும். மேலும் விதை மூட்டைகளை அடுக்கும் போது அவற்றை 6-8 மூட்டைகளுக்கு மேல் ஒரே அடுக்கில் அடுக்கக் கூடாது. அதற்கு மேல் அடுக்கும் போது அடியிலுள்ள மூட்டைகளின் விதைகள் அதிக அழுத்தம் காரணமாக பாதிப்படைய வாய்ப்புள்ளது.

மேற்கூறிய நடைமுறைகளை பின்பற்றி விதைகளை பாதுகாத்து பராமரிப்பதன் வாயிலாக விதையின் வீரிய தன்மை மற்றும் முளைப்புத்தன்மை நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கப்படும்.

ராகி, எள், கீரை வகை விதைகள் போன்ற மிக சிறிய விதை களுக்கு ஈரப்பதம் அறிய 50 கிராம் என்ற அளவிலும், மற்ற அனைத்து விதைகளுக்கு 100 கிராம் என்ற அளவில் 700 காஜ் அடர்த்தியுள்ள பாலித்தின் பைகளில் இட்டு காற்று புகாத வண்ணம் பேக் செய்து ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 கட்டணம் செலுத்தி 368/1, முதல் தளம், திருநகர் காலனி, திருச்சி ரோடு, பல்லடம், திருப்பூர்-641664 என்ற முகவரியில் இயங்கிவரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி விதையின் ஈரப்பதத்தையும் தரத்தையும் அறிந்து கொள்ளலாம்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741